**தலைப்பு 140 - கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013**

---

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

**கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

---

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 292 | கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவினமும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 3,008,567,679 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் இதில் ரூபா 2,427,801,036 பயன்படுத்தப்பட்டிருந்தது. இதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் முறையே ரூபா 367,583,402 மற்றும் ரூபா 213,183,241 ஆன தேறிய ஏற்பாட்டில் 17 சதவீதம் மற்றும் 25 சதவீதம் ஆகும். விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்புக்கள் தேறிய நிதியேற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| 140 | 2,155,811,679 | 1,788,228,277 | 367,583,402 | 17 |
| 292 | 852,756,000 | 639,572,759 | 213,183,241 | 25 |
| மொத்தம் | 3,008,567,679 | 2,427,801,036 | 580,766,643 | 19 |

## 2.2 முற்பணக் கணக்குகள்

### 2.2.1 அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்குரிய அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| விடய இலக்கம் | செலவினம் | | | பெறுவனவு | | வரவு மீதி |
|---|---|---|---|---|---|---|
| | உச்ச எல்லை | உள்ளவாறு | குறைந்த எல்லை | உள்ளவாறு | உச்ச எல்லை | உள்ளவாறு |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14001 | 6,000,000 | 3,398,348 | 3,700,000 | 4,415,583 | 30,000,000 | 13,803,799 |
| 29201 | 28,000,000 | 25,803,127 | 15,000,000 | 23,344,769 | 110,000,000 | 74,578,441 |

### 2.2.2 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 19,618,808 கூட்டுமொத்தமாக இருந்தது. விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | **ரூபா** |
| கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0052/000 | 2,418,438 |
| கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் | 6000/0000/00/0015/0147/000 | 17,200,370 |
| **மொத்தம்** | | **19,618,808** |

## பகுதி 2

## ஒவ்வொரு தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

## தலைப்பு 140 - கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 02 ஆம் திகதி அமைச்சின் செயலாருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நிதியதிச் சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கிட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

### 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கால்நடை வளர்ப்பு, கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றுக்களும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

#### (அ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளைப் பேணியிருக்காமை

---

அமைச்சினால் நிதிப்பிரமாணத்தின் 214 ஆம் இலக்கத்தின் பிரகாரம் பொறுப்புப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) கணக்காய்வுச் சான்றின்மை

---

''சுயதொழில் சுழற்சி நிதிய கடன் உத்தேச முறைமை'' தொடர்பில் அரச வங்கியொன்றில் பேணப்பட்டு வரும் சேமிப்புக் கணக்கிற்குரிய வைப்புப் புத்தகமானது கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. 2013 செப்தம்பர் 12 இல் உள்ளவாறான கணக்கு மீதி ரூபா 8,252,704 ஆனதுடன், நலனாளிகளின் பொருட்டு ரூபா 3,845,061 ஆன கடன்தொகை

வழங்கப்பட்டிருந்தது. இக் கடன் வழங்கலுக்குரிய தகவல்கள் எதுவும் கணக்காய்விற்கு முன்வைக்கப்படவில்லை.

**(இ) கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்**

மீளாய்வாண்டினுள் அமைச்சிற்கு முன்வைக்கப்பட்ட ஐய வினாவொன்றிற்கு 2014 நவம்பர் 15 வரையிலும் பதிலளிக்கப்படாதிருந்ததுடன், அவ் வினாவிற்குரிய மதிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 18,370,797 ஆகும்.

**(ஈ) பாதீட்டு முரண்**

(i) 02 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 16,020,000 ஆன மொத்த தேறிய நிதி ஏற்பாடும் எஞ்சியிருந்தது.

(ii) 18 செலவின விடயங்கள் தொடர்பில் மிகை நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் நிதியேற்பாட்டின் பாவனைக்குப் பின்னரான மிகுதி அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 94 சதவீத்திற்கு இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

(iii) 10 செலவின விடயங்களுக்குரிய ரூபா 130,158,523 ஆன குறை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அச் செலவின விடயங்களுக்காக நிதி பிரமாணம் 66 இன் மாற்றுதல் மூலம் ரூபா 3,229,000 தொகையும் குறைநிரப்பு மதிப்பீடொன்றின் மூலம் ரூபா 130,675,679 தொகையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

**(உ) அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று**

14001 ஆம் விடய இலக்க முற்பணக் கணக்கு தொடர்பிலான 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்க கூற்றின் பிரகாரம் அத்தினத்தில் அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 649,918 ஆக இருந்ததுடன், 17 வருடங்களை விட பழமையான, சேவையினைக் விட்டுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 05 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 950,491 இனை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 1.4 கணக்களி தகைமையும் நல்லாளுகையும்

### 1.4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பிஎவ்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயத்தின் கடிதத்தின் 1.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், பால் நிர்ணயம் செய்யப்பட்ட விந்தணுக்களின் 30,000 வடிகளை இறக்குமதி செய்யும் செயற்பாடு அத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு திட்டத்தில் பால் உற்பத்திகளுக்கான புற்களின் பயிர்ச்செய்கைச் செயற்திட்டம் தொடர்பான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 1.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

### (அ) செயற்பாடற்ற சொத்துக்கள்

அமைச்சிற்குரிய 06 வாகனங்கள் 11 மாதங்கள் முதல் 32 மாதங்களுக்கு இடைப்பட்ட காலமாக செயற்பாடற்று காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வினை நடாத்துதல்

சகல விரிவுகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைச்சின் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 2013 ஆம் ஆண்டிற்கான அமைச்சிற்குரிய 63 வாகனங்கள் தொடர்பில் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### (இ) வெளித் தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

முன்னாள் அமைச்சருக்கென ஒதுக்கப்பட்டிருந்த 05 வாகனங்கள் மீளக் கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

அமைச்சினால் 2013 திசெம்பர் 31 ஆந் திகதி தீர்க்கப்படாதிருந்த ஒரு வருடத்திற்கும் குறைவான பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 3,006,245,368 ஆகும்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செலவின விடய இலக்கம் 140-2-4-2502(2) இன் கீழ் நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்திற்கு பொறுப்புக்களாக ரூபா 15,101,329 ஆன தொகை காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 66,580,250 ஆன தொகை காண்பிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 51,478,921 ஆல் கூடுதலாக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நிதிப் பிரமாணம் 94(1) இன் பிரகாரம் வேறு விதத்தில் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களினைத் தவிர வருடாந்த மதிப்பீடுகளில் அது தொடர்பில் நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்குமாயின் மட்டுமே திணைக்களமொன்றினால் எதுவித செலவொன்றிக்கு அல்லது கடப்பாடொன்றிற்கு உட்பட கூடாதென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், மதிப்பீட்டில் ஏற்பாட்டு செய்யப்பட்ட நிதியினை விஞ்சி ரூபா 3,006,245,368 ஆன பொறுப்புக்களின் பெறுமதியொன்று திறைசேரியின் ஆலோசனைகளின் அடிப்படையில் மில்கோ நிறுவனத்தின் ஒழுங்கமைப்புக்கள் தொழிற்சாலை நவீனமயப்படுத்தலின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

## 1.6 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

2010 ஆம் ஆண்டில் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்த வேலைவாய்ப்பு செயற்திட்டத்திற்காக தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு கடன் வழங்கும் பொருட்டு தாபிக்கப்பட்டிருந்த ரூபா 10,300,000 ஆன சுழற்சி நிதியத்தின் செயற்படுத்துவது தொடர்பில் 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய 423 ஆம் இலக்க பிரமாணங்கள் பொது நிதிச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த விதப்புரைகள் எதுவும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயற்திட்ட அமுலாக்கலிலுள்ள நலிவுகள்

செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள் மற்றும் நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றம் அடையப்பெறாத செயற்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### (அ) செயற்திட்டங்களை நிறைவேற்றுவதிலுள்ள தாமதங்கள்

அமைச்சினால் மீளாய்வாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 42,465,652 ஆன மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய 34 செயற்திட்டங்கள் தொடர்பில் செலுத்த வேண்டிய தொகையானது ரூபா 18,125,901 ஆக இருந்ததுடன், உரிய மதிப்பீடு மற்றும் பின்தொடர் நடவடிக்கையின் பின்னர் அத் தொகையினை செலுத்தவதற்கு போதியளவில் நடவடிக்கை எடுக்கப்படாமையால் செயற்திட்டங்களின் நிதி முன்னேற்றமானது 10 சதவீதமான குறைந்த மட்டத்தில் நிலவியது.

### (ஆ) நிதி விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்றம் அடையாத செயற்திட்டங்கள்

(i) மலசலகூடங்களை நிர்மாணித்தல் மற்றும் நீர் வழங்கல் செயற்திட்டங்களிற்காக ரூபா 41,349,612 ஆன தொகை செலவிடப்பட்டு 103 உப செயற்திட்டங்களை செயற்படுத்தவதற்கு திட்டமிடப்பட்டு 2013 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் அது தொடர்பில் ரூபா 7,450,498 ஆன தொகை உரிய முகவர் நிறுவகத்திற்கு செலுத்தப்பட்டிருந்ததெனினும், 2013 திசெம்பர் 31 திகதி வரையிலும் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாதிருந்தமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட வருடாந்த முன்னேற்ற அறிக்கைக்கமைய அவதானிக்கப்பட்டது.

(ii) கிராமிய சமூக பிரிவின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கிராமிய சமூக அபிவிருத்தியின் கீழ் பல்வேறுபட்ட துணைச் செயற்திட்டங்கள் 24 உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி பொறுப்பின் ஊடாக நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 54,730,077 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், இச் செயற்திட்டமானது மீளாய்வாண்டிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) அமைச்சின் செலவினத் தலைப்பின் கீழ் வெளி நபர்களுக்கு மின்சாரம் விநியோகித்தமைக்காக ரூபா 39,775 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**1.8 செயலாற்றல்**

--------------------

2013 இன் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காணப்படுகின்றன.

(01) கால்நடை வளர்ப்பு பிரிவு

-----------------------------------------

(i) திரவப் பால் நுகர்வின் (செலவின விடய இலக்கம் 140-2-3-2502(3)) கீழ் பால் விற்பனை நிலையங்களை ஆரம்பித்தல், பால் சேகரித்தலை அதிகரித்தல், மேம்படுத்தல் வேலைத்திட்டம் பால் குளிரூட்டும் தாங்கிகள் கொள்வனவு மற்றும் செயற்திட்ட மேவுகை நடவடிக்கைகள் தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியானது ரூபா 40 மில்லியன் ஆகும். இதில் மீளாய்வாண்டின் இறுதியில் செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 9,639,089 ஆகும். 18 பால் விற்பனை நிலையங்களை ஆரம்பிப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 12 நிலையங்கள் மாத்திரமே ஆரம்பிக்கப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் எஞ்சிய ஒவ்வொரு செயற்பாட்டிற்குமான இலக்கு மற்றும் செயல்முன்னேற்றம் தொடர்பில் தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் செயலாற்றல் தொடர்பில் பரிசீலனைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ii) சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கோழிப் பண்ணை முறைமையை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் (இலக்கம் 140 -2-3-2502 (19)) கீழ் 07 செயற்திட்ட செயற்பாடுகள் தொடர்பில் மீளாய்வாண்டின் போது ஒதுக்கிய நிதியேற்பாடானது ரூபா 20 மில்லியன் ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியிலான செலவினமானது ரூபா 9,137,495 ஆகும். இச் செயற்திட்டத்தின் செயல்முன்னேற்றம் கீழ்வருமாறு இருந்தன.

| செயற்திட்டம் | 2013 இன் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு | செயல்முன்னேற்ற மீளாய்வு அறிக்கையின் படியான செயல்முன்னேற்றம் (2013 திசெம்பர் 31 இல்) |
|---|---|---|
| சிறு அளவிளான பண்ணைகளை ஆரம்பித்தல் | 2000 | 1500 |
| சிறிய குஞ்சு பொறிப்பகங்களை (Hatcheries) ஆரம்பித்தல் | 5 | 2 |
| குளிரூட்டிய களஞ்சிய வசதிகள் | 2 | - |
| சிறிய உற்பத்தி அலகுகளை ஆரம்பித்தல் | 25 | 7 |
| சிறிய உணவு உற்பத்தி அலகுகளை ஆரம்பித்தல் | 15 | 5 |
| நடமாடும் விற்பனை அலகு | 20 | 3 |
| மேம்படுத்தல் வேலைத்திட்டம் | - | - |

(iii) 2013 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத செயற்பாடுகளான பால் நிர்ணயிக்கப்பட்ட 30.000 எருதுகளின் விந்துணுத் தொகுதிகள் ரூபா 2,200 படி இறக்குமதி செய்வதற்காக இலக்கம் 70 மற்றும் 2013 மார்ச் 18 ஆம் திகதிய முழுமையான மதிப்பீடொன்றின் மூலம் ரூபா 65,978,637 தொகை வழங்கப்பட்டிருந்தன. எவ்வாறெனினும் 14,500 தொகுதிகள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. அந்த 14,500 தொகுதிகளுக்காக ரூபா 62,386,985 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், ஒரு தொகுதியின் விலையானது ரூபா 2,200 இலிருந்து ரூபா 4,302 வரை அதிகரித்திருந்தது.

(02) கிராமிய சனசமூக அபிவிருத்திப் பிரிவு

(அ) சனசமூக ஆதார ஒன்றியங்களை வலுப்படுத்தல் மூலம் கிராமிய சமூகத்தினை வலுப்படுத்துவதற்காக ரூபா 360 மில்லியன் தொகை மதிப்பிடப்பட்டு, பல்வேறு பிரிவுகளின் கீழ் 9 வேலைத்திட்டங்கள் மற்றும் அச் செயற்திட்டங்களின் கணக்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்காக ஒரு செயற்திட்டம் எனும் ரீதியில் 10 செயற்திட்டங்களை அமுல்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

இது தொடர்பின் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் காலச்சட்டகத்தின் பிரகாரம் ஒவ்வொரு செயற்பாட்டினதும் பௌதீக மற்றும் நிதிச்

செயலாற்றலினை நிறைவேற்றுதல், மேற்பார்வை மற்றும் மதிப்பீடு தொடர்பில் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3.5 மில்லியனை விஞ்சி ரூபா 2,024,211 தொகை செலவிடப்பட்டிருந்ததெனினும் மீளாய்வாண்டினுள் அங்கீகரிக்கப்பட்டிருந்த 268 செயற்திட்டங்களில் 26 செயற்திட்டங்கள் மாத்திரமே நிறைவு செய்யப்பட்டிருந்தன.

(ii) பெருந்தோட்ட வீடமைப்பு அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பிற்கு வழங்கப்பட்டிருந்த குரங்கு மலைப் பாதையின் ஒரு பகுதியினைத் தாரிடுவதற்கான ஒப்பந்தத்தின் இறுதிக் கொடுப்பனவாக ரூபா 1,113,733 தொகை 2014 சனவரி 29 ஆம் திகதி ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்ததெனினும் 184 நாட்களுக்குரிய ரூபா 92,000 தொகையான தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(iii) விசேட செயற்திட்டங்களின் கீழமைந்த நீர்வழங்கலை வியாபிக்கும் செயற்திட்டமொன்றிற்காக கேகாலை பெருந்தோட்ட வீடமைப்பு நம்பிக்கைப் பொறுப்பிற்கு ரூபா 1,278,404 தொகை ஒப்பந்தமொன்று இல்லாமல் செலுத்தப்பட்டிருந்தது. 2014 சனவரி 17 ஆம் திகதி வரையிலும் செயற்திட்டமானது முழுமையாக நிறைவு செய்யப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தமொன்று இன்மையால் செயற்திட்டத்தை நிறைவு செய்யவேண்டிய திகதி உரிய நிபந்தனைகள் மற்றும் தாமதக் கட்டணங்களை அறவிடுதல் போன்றவை தொடர்பில் தகவல்கள் எதனையும் பரிசீலிக்க முடியாதிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி தொடர் வேலையாக இருந்த கிராமிய சனசமூக பிரிவினால் செயற்படுத்தப்படுகின்ற பெரும்பாலான செயற்திட்டங்களின் மூன்று மாத உடன்படிக்கை காலம் நிறைவடைந்திருந்த போதிலும், முகவர் நிறுவனங்களின் வேண்டுகோளின் பேரில் அமைச்சினால் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருந்தது. கால நீடிப்பிற்கு முகவர் நிறுவனங்கள் காண்பித்திருந்த காரணங்கள் நியாயமானவை என உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திட்டமிடல்**

**வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கிணங்க செயற்படாமை**

ஒவ்வொரு செயற்திட்ட குழுவின் கீழ் நிகழ்த்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள உப செயற்திட்டங்களின் எண்ணிக்கை மற்றும் அது தொடர்பில் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய தகவல்கள் 2013 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்காமையினால் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திட்டங்களுக்குரிய செயன்முன்னேற்ற அறிக்கையுடன் ஒப்பீடொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**1.9 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

15 வருடங்களுக்கு முன்னர் ஐந்து வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த ரூபா 245,229 ஆன திடீர் விபத்து நட்டம் தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.10 முகாமைத்துவ நலிவுகள்**

2000 ஆகஸ்ட் 24 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இளைஞர்களை தொழில்களுக்கு பயிற்சியளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் சுயதொழில் வழங்கல் நோக்கில் தோட்டப்புற இளைஞர் யுவதிகளுக்கு கடன் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு நிதியமொன்றினை உருவாக்குவதற்காக அரச வங்கியொன்றில் ரூபா 1,000,000 இனை வைப்புச் செய்தமை தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட தொகையினை விஞ்சி ரூபா 300,000 தொகை 2004 ஆம் ஆண்டில் வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 செப்தம்பர் 12 ஆம் திகதிய வங்கிக் கூற்றின் பிரகாரம் 2000 ஆம் ஆண்டிலிருந்து வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த தொகையில் ரூபா 3,845,061 (நிதியத்தில் 37 சதவீதம்) நலனாளிகளுக்கு கடனாக வழங்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 8,252,704 தொகை வங்கியில் செயற்பாடற்றுக் காணப்பட்டது. அமைச்சினால் நிதியத்தினூடாக உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களை அண்மிப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) 2011 ஆம் ஆண்டிலிருந்து சுழற்சி நிதியம் தொடர்பில் வங்கியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகியிருந்ததுடன், அந்

நிதியத்தினை பொருத்தமான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தாத காலத்திற்காக சாதாரண சேமிப்புக்களுக்கு செலுத்தப்படுகின்ற வட்டித் தொகையினை கணக்கிற்கு செலவு வைக்குமாறு வங்கிக்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டில் செல்லுபடியற்ற ஒப்பந்தத்தினை செல்லுபடியுள்ளதாக்கி நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு வங்கியின் இணக்கப்பாட்டு ஒப்பந்தமொன்றினை ஏற்படுத்திக்கொள்வதற்கு 2014 செப்தம்பர் 20 ஆம் திகதி வரையிலும் அமைச்சு தவறியிருந்தது.

(ஈ) வங்கியிலிருந்து கிடைக்கின்ற இரண்டு சதவீத வட்டியினைப் பெறுவதைத் தவிர 2011 ஆம் ஆண்டிலிருந்து இந் நிதியத்திலிருந்து எவ்வித நலனும் பெறப்படாதிருந்ததுடன், நிதியத்தினை பயன்படுத்துவதற்கு தேவையான எதுவித எதிர்கால வேலைத்திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை இந் நிதியத்தின் மூலம் கடன் வழங்கல் தொடர்பில் தோட்டப்புற இளைஞர் யுவதிகள் அறிவூட்டப்பட்டிருந்தனரா என்பது தொடர்பில் தகவல்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.11 மனிதவள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 27 | 21 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 04 | 01 |
| (iiii) | இரண்டாம் நிலை | 88 | 66 | 22 |
| (iv) | ஆரம்ப நிலை | 70 | 55 | 15 |
| (v) | ஏனையோர் (அமைய / தற்காலிக / ஒப்பந்த அடிப்படை) | 06 | 04 | 02 |
| | **மொத்தம்** | **196** | **150** | **46** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியில் 46 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**(ஆ) வேறு தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டிருந்த பதவியணியினர்**

அமைச்சினால் 2010 - 2013 வரையான காலப்பகுதியினுள் வேறு தரப்பினருக்கு முறையற்ற விதத்தில் விடுவிக்கப்பட்டிருந்த மனிதவளம் தொடர்பான விபரம் கீழே காணப்படுகின்றது.

| ஊழியர் வகை | ஊழியர் எண்ணிக்கை | வேறு தரப்பினர் | விடுவிடுக்கப்பட்டிருந்த காலம் | அமைச்சு செலுத்தும் ஊதியம் |
|---|---|---|---|---|
| இரண்டாம் நிலை | 01 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கெமிதிரிய மன்றம் | 2013 திசெம்பர் 31 வரை | அமைச்சினால் கொடுப்பனவு மேற்கொள்ளப் படவில்லை |
| இரண்டாம் நிலை | 02 | பாராளுமன்ற நடவடிக்கைகள் அமைச்சின் பிரத்தியேக பதவியணிக்காக | 2011 செப்தம்பர் 19 முதல் உறுப்பினர் விரும்பிய காலம் வரை | ரூபா 25,116 (மீள்நிரப்பல்) |
| | | | 2010 திசெம்பர் 01 முதல் உறுப்பினர் விரும்பிய காலம் வரை | ரூபா 26,664 (மீள்நிரப்பல்) |
| ஆரம்ப நிலை | 01 | மீளக்குடியேற்றல், அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பு தொடர்பான சனாதிபதியின் செயலணி | 2013 சனவரி 01 முதல் | ரூபா 26,082 (மீள்நிரப்பல்) |

## 2. தலைப்பு 292 – விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

---

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2014 யூலை 28 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (ஈ) வரையிலுள்ள பொது அவதானிப்புகள் மற்றும் 2.4 இலிருந்து 2.9 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

மிகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டமையின் காரணமாக 07 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

### (ஆ) கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவு பெற்றதை உடனடுத்து செயல்நிமித்த உப கட்டுநிதி தீர்க்கப்படாமல் செயற்பாடு நிறைவுபெற்று 1½ மாத தாமதத்தின் பின்னர் அந்த கட்டுநிதி தீர்க்கப்பட்டிருந்தது.

(ii) நிதிப்பிரமாணம் 371 இற்கு முரணாக 12 சந்தர்ப்பங்களின் போது 04 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 20,000 இனை விஞ்சி ரூபா 150,200 கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது.

### (இ) பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 3,534,952 தொகையான 58 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று**

29201 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 642,572 ஆக இருந்ததுடன் அந்த மீதிகளில் 02 வருடங்களுக்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 283,935 ஆக இருந்தது. இந்த நிலுவை மீதியை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

## 2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

**உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தினால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன் 2013 ஆம் ஆண்டின் போது 30 உள்ளகக் கணக்காய்வு ஐய வினாக்கள் வழங்கப்பட்டிருந்தன. திணைக்களத்தின் பிரதான 02 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிற்கு 2013 ஆம் ஆண்டில் ரூபா 472.5 மில்லியன் மூலதன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் அந்த அபிவிருத்தி செயற்திட்டங்களுக்குரிய கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. வருகை, வெளிச்செல்கை, விடுமுறை, இருப்புப் புத்தகம், பொருட்பதிவேடு போன்ற பதிவேடுகளுக்கு மாத்திரம் உள்ளகக் கணக்காய்வு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக செய்யப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) செயற்பாடற்ற மற்றும் குறைந்த பயன்பாடுடைய சொத்துக்கள்**

மிருக ஆராய்ச்சிப் பிரிவில் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத பொருட்கள் மற்றும் பழைய காலாவதியான இரசாயனப் பொருட்கள் கணிசமான அளவில் உரிய பிரிவுகளிலும் பிரதான களஞ்சியத்திலும் பரவிக் காணப்பட்டன. இதனிடையே 1986 தொடக்கம் 2008 ஆம் ஆண்டு வரையான கால வீச்சிற்குரிய அலுவலக உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட உபகரணங்களுக்குரிய 623 விடயங்களில் 2917 அலகுகளும், 2005 ஆம் ஆண்டிற்கு முன்னர் களஞ்சியத்திற்குக் கிடைத்த 40 விடயங்களுக்குரிய 135

அலகுகளும் கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் களஞ்சியத்தில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

--------------------------------------------------------------------------------

வருடாந்த பொருள் மெய்மையாய்வு தொடர்பாக பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.

(i) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்திற்குரிய 58 பிரிவுகளில் 26 பிரிவுகளுக்குரிய அறிக்கை மாத்திரம் 2014 மே 31 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ii) பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட சிபார்சுகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துதல்**

----------------------------------------------------------------------------------------------------

மாகாண சபை மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய 19 காணிக்கூறுகள் முறையான அங்கீகாரமின்றி திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

-------------------------------------------------------

திணைக்களத்தினால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 28,395,752 தொகையான பொறுப்புக்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.6 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு** | **இணக்கமின்மை** |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| நிதிப்பிரமாணம் 115(4) | உரிய நிதியாண்டில் முன்னைய நிதியாண்டிற்குரிய கொடுப்பனவுகளுக்காக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) பொது நிருவாகச் சுற்றுநிருபம் | |
| 1998 திசெம்பர் 30 ஆந் திகதிய 29/98 ஆம் இலக்க சுற்றுநிருபம் | சுற்றுநிருபத்தின் 4.8 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் மொழிபெயர்ப்பு உத்தியோகத்தர் இருக்கும் போது மொழிக்கான படி பெறுகின்ற உத்தியோகத்தருக்கு மொழிபெயர்ப்பிற்காக ரூபா 77,277 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) ஓய்வூதியச் சுற்றுநிருபம் | |
| 2010 மே 25 ஆந் திகதிய 4/2010 ஆம் இலக்க சுற்றுநிருபம் | அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற 49 பேர்களுக்காக 2013 ஆம் ஆண்டின் போது அரசாங்க ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புப் பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை<br>-------------------------------------------------<br>4.2.3, 5.3.11, 5.4.8, 6.2.2 மற்றும் 6.3.6 ஆம் வழிகாட்டிகள் | அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்களுக்கு முரணாக மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 13,616,900 தொகையான பாதுகாப்பு சேவை பெற்றுக்கொள்ளும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தது. |

## 2.7 செயலாற்றல்

மிருக வள மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் 2011 சனவரி மாதத்தின் போது தயாரிக்கப்பட்ட மிருக வள பிரதான திட்டத்தின் பிரகாரம் இலங்கை 2016 வரையில் பாலிலிருந்து தன்னிறைவு அடைவதற்கு 800 மில்லியன் லீற்றர் பால் இலக்காக எதிர்பார்க்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டு வரையில் 381 மில்லியன் லீற்றர் பால் இலக்கு அடையப்பட்டிருந்தது. அது 2010 ஆம் ஆண்டில் உற்பத்தி செய்த அளவுடன் இணக்கஞ்செய்த போது வருடாந்த அதிகரிப்பு 15 சதவீதமாக இருந்தது. அந்த இயலளவு மட்டத்தில் 2016 வரையில் 500 மில்லியன் லீற்றர் பால் உற்பத்தி எதிர்பார்க்க முடியுமாக இருந்ததுடன் வருடாந்த இயலளவு அதிகரிப்பு இதிலிருந்து 30 சதவீத மட்டத்தில் பேணுவதாயின் எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை அடையக்கூடியதாக இருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டது. 2014 யூன் 30 ஆந் திகதி வரையிலும் இயலளவினை இரண்டு மடங்காக ஆக்குவதற்கு தெளிவான வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. உபாயத் திட்டம் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டிராததனால் மேற்கூறப்பட்ட இயலளவு மட்டத்தை அடைவது தொடர்பாக பிரச்சினைக்குரிய நிலை நிலவியமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 2.8 முகாமைத்துவ நலிவுகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பினவரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2011 ஆம் ஆண்டின் போது அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்ட பிரேரணைகளின் பிரகாரம் மிருக ஆராய்ச்சி நிறுவகத்திற்கு பால் தொழல்நுட்ப ஆய்வுகூடம் என்ற பெயரிலான செயற்திட்டம், 2013 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இருந்த போதிலும் இந்த செயற்திட்டத்திற்குரிய கட்டிட

நிர்மாணங்கள் 2014 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்து கையளிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 78 மில்லியன் தொகையான இரசாயனப் பொருட்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்வதற்கு திடமிடப்பட்டு அதில் ரூபா 11 மில்லியன் தொகை செலவில் 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது இரசாயனப் பொருட்களும் உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2014 யூலை 15 ஆந் திகதி வரையிலும் அந்த உபகரணங்களிலும் இரசாயனப் பொருட்களிலும் அனேகமானவை பாவனைக்கு எடுக்கப்படாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டதுடன் உபகரணங்களின் உத்தரவாதக் காலமும் கடந்திருந்தன.

(ஆ) ஒருநாள் வயதுடைய கோழிக் குஞ்சுகளை சினைப்படுத்துவதற்காக ரூபா 243,470 தொகை செலவில் மூன்று உத்தியோகத்தர்களுக்கு இந்தியாவில் 02 வாரங்கள் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது. பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இருக்கும் போது அந்தச் சேவை வெளிநபரினால் செய்வதற்காக ரூபா 11,609 தொகையான மேலதிக செலவினம் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 2.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 167 | 116 | 51 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 21 | 14 | 07 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 330 | 264 | 66 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 34 | 271 | - | 237 |
| | மொத்தம் | 552 | 665 | 124 | 237 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 124 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் அதில் 58 வெற்றிடங்கள் பதவிநிலைக்குரிய பதவிகளாக இருந்தன.